<u>14.03.2025</u>

**<u>மோ.வா.வி.கோ.மனு எண். 123 /2017</u>**

**<u>ம.சா. 1 -</u>** திரு.மாதவன்

மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.</u>**

**<u>கூடுதல் முதல் விசாரணை சாட்சியம்</u>**

நான் இந்த மனுவின் மனுதாரர் கூடுதல் முதல் விசாரணை சாட்சி வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் எனது அறிவுரையின் பேரில் அது தயார் செய்யப்பட்டது. இந்த மனுவில் சேதப்படுத்தப்பட்ட உயர் மின் அழுத்த கோபுரத்தை சரிசெய்வதற்காக செய்யப்பட்ட செலவுகளையும், வேலை பார்த்த ஒப்பந்தக்காரர்களுக்கு தொகை செலுத்தப்பட்ட விபரங்கள் அடங்கிய Measurement Book பக்கம் 63 முதல் 95 வரையிலான புகைப்பட நகலை உண்மை நகலாக தாக்கல் செய்கிறேன் அது **ம.சா.ஆ.8**.

**<u>எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

ரூ.1,74,547/- ஒப்பந்தக்காரர்களுக்கு காசோலையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். காசோலை பெற்றுக்கொண்டதாக ஒப்பந்தக்காரர் எழுத்து பூர்வமாக எழுதிக்கொடுத்தாரா என்றால் நாங்கள் காசோலை கொடுத்து விட்டு கையொப்பம் பெற்று வாங்குவோம் காசோலை பெற்றுக்கொண்டதாக ஆவணத்தில் கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை அதற்கு தனிப்பதிவேடு உண்டு. மேற்படி காசோலையில் கண்ட தொகை ஒப்பந்தக்காரர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதாகவும் எங்களின் வங்கி கணக்கில் பற்றானதாகவும் எங்கள் வங்கி வரவு செலவு கணக்கை தாக்கல் செய்தால் தெரிய வரும் என்றால் சரிதான். தாக்கல் செய்த ம.சா.ஆ 8 ஆவணம் அரசாங்க அதிகாரியால் கையொப்பம் செய்யப்பட்ட ஆவணமாகும். அதிகமான நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக கூடுதல் தொகையை கணக்கில் காட்டப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ம.சா.ஆ.4 ல் சொல்லப்பட்ட லெட்சுமி - சிவானி கன்ஸ்டிரக்சன் நிறுவனத்தில் இருந்து வேலை செய்த நபரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்தால் மட்டுமே என்ன

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.14 18:11:26 +0530

உபகரணங்கள் சேதமடைந்தது. அதற்கு சரிசெய்வதற்கு எத்தனை உபகரணஙகள் வாங்கப்படடது. மற்றும் பொருட்கள் வாங்கப்படடது எனவும் சேதமடைந்ததை சரிசெய்வதற்கு எத்தனை மனித சக்திகள் வேலை பார்த்தார்கள் என்பதை நிரூபிக்க முடியும் என்றால் சரிதான். சேதமடைந்த பொருளை அப்புறப்படுத்தி அதனை பொது ஏலத்தில் விட்டு தொகை பெறப்பட்டதா அல்லது விற்பனை செய்யப்பட்டதா என குறிப்பிட்டு இந்த வழக்கு சம்பந்தப்பட்ட பொருளை மட்டும் ஏலம் விடப்படவில்லை அலுவலகத்தில் உள்ள எல்லா பொருளும் ஏலம் விடப்படும் அதனால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. கிடங்கில் ஒப்படைக்கும் போது எடை மதிப்பில் மட்டுமே ஒப்படைப்போம். ம.சா.ஆ.8 வழக்கிற்காக அதிக நஷ்ட ஈடு பெறுவதற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை -</u> இல்லை**

BARSAD BEGUM A

Digitally signed by BARSAD BEGUM A
Date: 2025.03.14 18:11:32 +0530